## மூன்றாம் பருவத் தொகுத்தறிவுத் தேர்வு

மதிப்பெண்: 60

### தமிழ்

வகுப்பு - நான்கு - ____________ நேரம்: 2மணி

**I. சரியான விடையைத் தேர்வு செய்க.** 10 × 1 = 10

1. ‘பனிச்சறுக்கு’ - இச்சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ____________

   அ) பனி + சறுக்கு ஆ) பனிச் + சறுக்கு இ) பன + சறுக்கு ஈ) பன் + சறுக்கு

2. ‘உண்மை’ என்ற சொல்லின் பொருள் ____________

   அ) பொய் ஆ) தவறு இ) சரி ஈ) மெய்

3. பின்வருவனவற்றுள் எது உள்ளரங்க விளையாட்டு இல்லை?

   அ) தாயம் ஆ) ஐந்தாங்கல் இ) பல்லாங்குழி ஈ) கபடி

4. ‘தடையின்றி’ - இச்சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ____________

   அ) தடை + யின்றி ஆ) தடை + இன்றி இ) தடை + ஈன்றி ஈ) தடைஇ + ன்றி

5. ‘கல்லார்’ - இச்சொல்லின் எதிர்ச்சொல் ____________

   அ) படிக்காதவர் ஆ) கற்றார்
   இ) அருளில்லாதவர் ஈ) அன்பில்லாதவர்

6. ‘பாவலர்’ - இச்சொல்லின் பொருள் ____________

   அ) பாதுகாவலர் ஆ) மருத்துவர் இ) கவிஞர் ஈ) பெரியவர்

7. சார்லஸ் பாபேஜ் கண்டறிந்த அறிவியல் கருவி ____________

   அ) தொலைக்காட்சி ஆ) கணினி
   இ) கைப்பேசி ஈ) மடிக்கணினி

8. ‘நற்பண்பு’ - இச்சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ____________

   அ) நல்ல + பண்பு ஆ) நற் + பண்பு இ) நல் + பண்பு ஈ) நன்மை + பண்பு

9. ‘நவை’ என்னும் சொல்லின் பொருள் ____________

   அ) அச்சம் ஆ) மகிழ்ச்சி இ) வருத்தம் ஈ) குற்றம்

10. ‘நிழற்படம்’ - இச்சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ____________

    அ) நிழள் + படம் ஆ) நிழை + படம் இ) நிழல் + படம் ஈ) நிலை + படம்

**II. பொருள் கூறுக.** 5 × 1 = 5

11. கல்லார் -
12. பூத்தல் -
13. அஞ்சி -
14. மெய் -
15. ஆகுலச்சொல் -

**III. பிரித்து எழுதுக.** 5 × 1 = 5

16. வைத்துக்கொள்வோம் -
17. பொருளற்ற -
18. இன்னலம் -
19. கல்விச்செல்வம் -
20. பொருட்செல்வம் -

**IV. எதிர்ச்சொல்லை இணைக்க.** 5 × 1 = 5

21. குறைய - இளைத்த
22. மெல்லிய - முடியாது
23. முடியும் - மெதுவாக
24. விரைவாக - தடித்த
25. கொழுத்த - நிறைய

**V. பாடலை நிறைவு செய்க.** 5 × 1 = 5

26. பஞ்சு போன்ற மேகமே
பார்க்க நெஞ்சு மகிழுமே
காற்று வீசும் ________________
கலைந்தே ________________
மக்கள் உள்ளம் ________________
மழையாய் ________________ மேகமே!

**VI. 'லை', 'கை' போன்ற எழுத்துகளில் முடியும் சொற்களை எழுதுக.** 10 × 1 = 10

27.

| லை | கை |
| --- | --- |
| | |
| | |
| | |
| | |
| | |

**VII. எழுவாயை எடுத்து எழுதுக.** $6 \times 1 = 6$

28. பறவைகள் வானில் பறந்தன.
29. குழந்தை சிரித்தது.
30. பசு புல் மேய்ந்தது.
31. அண்ணன் தம்பிக்கு உதவினான்.
32. கண்ணன் படம் வரைந்தான்.
33. பூங்கோதை பள்ளி சென்றாள்.

**VIII. எவையேனும் ஏழு வினாக்களுக்கு மட்டும் விடையளி.** $7 \times 2 = 14$

34. ஊர்த்தலைவர் பசுவை யாருக்குக் கொடுத்தார்?
35. கோபிநாத் பேசிய போது மலை என்ன செய்தது?
36. பறவைக்கப்பல் எனக் குறிப்பிடப்படுவது எது?
37. பொருளற்ற சொற்களை அவையினர் முன் பேசுபவர் யார்?
38. தமிழகப் பாரம்பரிய விளையாட்டுகள் எவை?
39. காட்டில் நடந்த போட்டியின் பெயர் என்ன?
40. மின்னஞ்சல் எதற்குப் பயன்படுகிறது?
41. நீதிநெறி விளக்கத்தை இயற்றியவர் யார்?